# கட்டாய கல்வி உரிமைச் சட்டப்படி பள்ளி வசதி இல்லா குடியிருப்பு பகுதிகளில் உள்ள மாணவ / மாணவியர்க்கு பள்ளி வந்து செல்ல போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல் – ஆணை

பள்ளிக்கல்வித் துறை (அகஇ) துறை

அரசாணை (நிலை எண்) 256 நாள் 16–12–2013

படிக்கப்பட்டவை

1. ஆரசாணை (1டி) எண் 172 பள்ளிக்கல்வித் துறை நாள் 04–06–2012
2. அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநரின் கடித ந,க, எண்.1047/′CESS.B3 / அகஇ நாள் 09–2013

ஆணை

குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாக் கல்வி உரிமைச்சட்டம் 2000 இன் படி 6 முதல் 14 வயதுடைய அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்து பாலின வேறுபாடின்றி தரமான கல்வி அளிப்பதற்கு தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் மலைப் பிரதேசம் மற்றும் தொலைதூர குடியிருப்புகளிலுள்ள மாணவ / மாணவிகளுக்கு போக்குவரத்து வசதிகள் முதன் முறையாக ஏற்படுத்துதல் என்ற மாண்புமிகு பள்ளிக் கல்வி விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள 2012 –2013 ஆம் ஆண்டில் மானிய கோரிக்கையின் போது வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து கோயமுத்தூர் கன்னியாகுமரி தஞ்சாவூர் நீலகிரி திருநெல்வேலி, திருவள்ளூர் திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி ஆகிய எட்டு மாவட்டங்களில் பள்ளி வசதி இல்லாத குடியிருப்பு பகுதியில் 6 தல் 14 வயது வரையுள்ள 4857 குழந்தைகள் கல்வி கற்க ஏதுவாக பள்ளி செல்ல போக்குவரது வசதியினை வெளி ஆதாரத்திலிருந்து மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் ரூ.1.45 கோடி செலவில் முறையான உரிமம் பெற்ற வாகனங்களின் மூலம் 2012–2013 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ள மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2, அதன் அடிப்படையில் அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநர் தற்போது அரசுக்கு அனுப்புள்ள கருத்துருவில் 2013–2014 ஆம் ஆண்டு புவி தகவல் முறைமை ஆய்வின் மூலம் 1 கிலோ மீட்டர் 3 கிலே மீட்டர் தொலைவில் முறையே தொடக்க மற்றும் உயர் தொடக்க பள்ளி வசதி இல்லா குடியிருப்புகளில் அரசு பேருந்து வசதி இல்லாத 813 குடியிருப்புகள் 11 மாவட்டங்கள் ( கோயம்புத்தூர், தர்மபுரி காஞ்சிபுரம் கன்னியாகுமாரி மதுரை தஞ்சாவூர் நீலகிரி பெரம்பலூர், திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை) கண்டறியப்பட்டுள்ளதாகவும் இக்குடியிருப்புகளில் உள்ள அமைத்து (11002) குழந்தைகளுக்கும் போக்குவரத்து வசதி ஏற்படுத்திட அனைவருக்கும கல்வித் திட்ட ஒப்புதல் குழுவிடம் ஒப்புதலுக்காக சமர்பிக்கபட்டதாகவும், திட்ட ஒப்புதல் குழு 2012 –2013 இல் போக்குவரத்து வசதி வழங்கிய 4857 மாணவர்களின் எண்ணிக்கைக்கு மட்டுமே ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அம்மாணவர்கள்

தவிர்த்து மீதமுள்ள 6145 மாணவர்கள் பின்வரும் வகையைச் சேர்ந்தவர்கள் என்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1, பள்ளி வசதி இல்லாத தொலைதூர மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் தொகை கொண்ட குடியிருப்பு பகுதிகளில் உள்ள பள்ளி வயது குழந்தைகள்
2, பள்ளி கட்ட இடவசதி இல்லாத நகர்புறத்தில் வசிக்கும் பள்ளி வயது குழந்தைகள்
3, பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய வகுப்பினை சார்ந்த குழந்தைகள்
4, பள்ளி வசதி இல்லாத பகுதிகளில் உள்ள சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள்.

3, எனவே, அனைவருக்கும் கல்வி திட்ட ஒப்புதல் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 4857 மாணவர்கள் தவிர மீதமுள்ள பள்ளி வசதி இல்லா குடியிருப்புகளில் உள்ள 6145 மணவர்களுக்கு பள்ளி வந்து செல்ல போக்குவரத்து வசதி ஏற்படுத்தி தர ரூ.184.350 இலட்சம் கூடுதல் செலவினம் தேவைப்படும் எனவும், இக்கூடுதல் செலவினத்தை மாநில நிதியில் இருந்து ஒதுக்கீடு செயது தருமாறும் அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநர் தனது கருத்துருவில் கேட்டுக்கொண்டுள்ளார்.

4, அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநரின் கருத்துருவை நன்கு ஆய்வு செய்து மலைப்பிரதேசம் மற்றும் தொலைதூர குடியிருப்புகளிலுள்ள மாணவ / மாணவியர்களுக்கு போக்குவரத்து வசதிகள் முதன் முறையாக ஏற்படுதுதல் என்ற 2012–2013 ஆம் ஆண்டிற்கன அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு அனைவருக்கும் கல்வி திட்ட ஒப்புதல் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 4857 மாணவர்கள் தவிர மீதமுள்ள பள்ளி வசதி இல்லா குடியிருப்புகளில் உள்ள 6145 மாணவர்களுக்கு பள்ளி வந்து செல்ல போக்குவரத்து வசதி ஏற்படுத்தி தர ஆகும் கூடுதல் செலவீனமான ரூ.184.350 இலட்சத்திற்கு ரூபாய் ஒரு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது,

5. மேலே பத்தி 4 இல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கோரிக்கை எண் 43.02 தொடக்கக்கல்வித் துறையின் கீழ் புதியதாக துவக்கப்பட்ட கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்,

2202 – பொதுக்கல்வி –01– தொடக்கக்கல்வி –800 ஏனைய செலவு – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – 11 – மாநில திட்டம் – KQ– மலைபிரதேசம் மற்றும் தொலைதூர குடியிருப்புகளிலுள்ள மாணவ / மாணவியர்களுக்கு போக்குவரத்து வசதி வழங்குதல் / 73 போக்குவரத்து செலவினம். (த.தொ.கு.2202 – 01–800 –KQ–7300)

**6.** மேற்காணும் செலவினம் ஒரு புதுப் பணி குறித்த செலவினமாகும். துணை மதிப்பீடுகளில் இச் செலவீனம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்ட பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பார செலவு நிதி பெறப்படும் முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படவேண்டும். எதிர்பாரா செலவு முன்பணம் ஒப்பளிப்புகள் ஆணைகள் நிதி ( வரவு செலவு பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும், உடனடி செலவுக்கான தொகையினை கணக்கிட்டு அதனை எதிர்பாரா செலவு நிதியில் இருந்து முண்பணமாக பெறுவதற்கு விண்ணபத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் (நிதி வரவு செலவு பொது–1) துறைக்கு சமர்ப்பிக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இச் செலவினத்தை 2013–2014 ஆண்டிறக்ான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குரிய கருதுருவினை உரிய நேரத்தில் தவறாது நிதி ( கல்வி –11) துறைக்கு அனுப்பிட அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

**7.** மேலே பத்தி **5** இல் உள்ள புதிய கணக்குத் தலைப்பிற்கு தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்கள் மதிப்பீடு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

**8.** சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள் / கருவூலக் கணக்கு அலுவலர்கள் மேற்காணும் புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**9.** இந்த அராணை நிதித்துறையின் ஆ,சா,எண்.187/JS/(RSM)2013 நாள் 16–12–2013 இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2371 (இரண்டாயிரத்து முன்னூற்று எழுபத்தொன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா

அரசு முதன்மைச் செயலாளர்